**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2057, திருவள்ளுவர் ஆண்டு, பராபவ வருடம், ஆடி மாதம் 26–ம் தேதி**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11–ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் –141/2019**

**CNR No: TNSV15000934–2019**

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக காவல் சார்பு ஆய்வாளர், திருப்புவனம் காவல்நிலையம் அதன் குற்ற எண்.157/2008 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | அய்யனாார், த/பெ.வெள்ளைச்சாமி, ஹரிஜன காலனி, பொன்மேனி, மதுரை–9 |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A) ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A) ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A) ன் கீழ் |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | --- |
| குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 04.06.2008 |
| எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 02.112009 |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | அ.சா.1: மு.வி & கு.வி: 15.11.2010<br>அ.சா.2: மு.வி & கு.வி: 15.11.2010<br>அ.சா.3: மு.வி & கு.வி: 15.11.2010<br>அ.சா.4: மு.வி: 09.03.2026 & கு.வி: இல்லை<br>அ.சா.5:மு.வி: 06.04.2026 & கு.வி: இல்லை<br>அ.சா.6: மு.வி & கு.வி: 17.07.2026 |
| பல்வகை மனு அதன் முடிவு | ---- |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 28.07.2026 |
| தீர்வு | **முடிவாக, அ)** எதிரி பிரிவு 304(ஏ) இதசவின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து 304(ஏ) இதசவின் கீழான குற்றத்திற்கு தண்டயையாக ஓர் ஆண்டு மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், ரூ.5,000/– அபராதம் செலுத்தவேண்டும் என்றும், |

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:37:57 +0530

| | |
|---|---|
| | அபராதத்தொகையை செலுத்தத் தவறினால் மேலும் 2 வார காலம் மெய்க்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும், குவிமுச பிரிவு 248(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>ஆ) இவ்வழக்கில் எதிரி ஏற்கனவே சிறையில் இல்லாததால் குவிமுச பிரிவு 428ன் கீழ் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை .<br>இ) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. இவ்வழக்கில் எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மானாமதுரை நீதிமன்றத்தில் CC No.225/2008 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் பின் இந்நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்டதால் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC.No.141/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 07.08.2026-ம் தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த பொழுது, அரசுக்காக கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 திருமதி. R.திலகராணி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கில் கடந்த 02.05.2008ம் தேதி பகல் 13.00 மணிக்கு லாடனேந்தலில் மதுரை to இராமேஸ்வரம் NH ரோட்டில் , இவ்வழக்கின் இறந்த நபரான ராமன் என்பவர் சைக்கிளில் கிழக்கே இருந்து மேற்கு நோக்கி வந்தவரை எதிரியானவர் தான் ஓட்டிவந்த TN-57-B-4786 என்ற 407 வேனை அதிகவேகமாகவும், அஜாக்கரதையாகவும் ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து மோதி மேற்படி இராமனுக்கு தலையில் பலத்த காயத்தை உண்டாக்கி இறக்கச் செய்தது என்பது எனது புலன் விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் உண்மை என தெளிவாக தெரியவருகிறது. எனவே எதிரியானவர் மீது இதச பிரிவு 304(A) ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற புகார் மற்றும் இதர

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:38:04 +0530

ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கின் எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A)ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு போதிய முகாந்திர ஆதாரங்கள் இருந்ததால் இவ்வழக்கு மேற்படி பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்னர் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கின் எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றம் பற்றி வினவ எதிரி அவற்றை தம்மிச்சையாக மறுத்துக் கூறினார். எனவே இருதரப்பினர்களை கேட்டும் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் எதிரி மீது முதல் நோக்கில் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரங்கள் இருந்தமையால் எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A) ன் கீழ் குற்றச்சாட்டு பற்றி விளக்கிக் கூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்தார்.

5)இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:–**

6.1)அ.சா.1 நேரு தனது சாட்சியத்தில், தான் லாடனேந்தலில் இருந்து வருகிறேன் என்றும், விவசாயத்தொழில் செய்து வருகிறேன் என்றும், சாட்சிகள் சுப்பையா இதயதுல்லா ஆகியோரையும் தெரியும் என்றும், ராமன் என்பவரையும் தெரியும் என்றும், 02.05.2008ம் தேதி மதியம் 1 மணியளவில் தானும், சுப்பையா , இதயதுல்லா ஆகியோர் லாடனேந்தல் பேருந்து நிறுத்ததில் நின்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது ராமன் என்பவர் சைக்கிளில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி போய்க்கொண்டு இருந்தார் என்றும், அப்போது கிழக்கு முதல் மேற்கு நோக்கி ஒரு வேன் டி.எண். 57 B 4786 என்ற பதிவு எண் உள்ள 406 வேண் அதிவேகமாக வந்து ராமன் மீது வேகமாக மோதி விபத்து உண்டாக்கியது என்றும், விபத்து உண்டாக்கி விட்டு அந்த வேனின் ஓட்டுநர் வேனை நிறுத்தி விட்டு ஓடிவிட்டார் என்றும், அதன்பின் காவல் நிலையம் சென்று விசாரித்து அவர் மதுரை என்று தெரியும் என்றும், (இன்று எதிரி ஆஜராகவில்லை என்றும்),

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:38:11 +0530

ராமனுக்கு தலையில் அடிபட்டு இருந்தது அவரை டாடா ஏ.சி.யில் (காரில்) வைத்து தானும், சுப்பையா, இதயதுல்லா ஆகியோர் மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், அவர் அங்கு இறந்துவிட்டார் என்றும், மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும், ராமனின் பெற்றோர்களுக்கு தகவல் கொடுத்து அவர்களும் வந்துவிட்டார்கள் என்றும், இறந்த ராமன் லாடனேந்தல் ஆவார் என்றும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தனர் என்றும், புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், இந்த விபத்து உண்டாக்கிய வேனின் ஓட்டுநர் அதிவேகமாக வந்ததால் தான் இந்த விபத்து உண்டானது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 சுப்பையா தனது சாட்சியத்தில், தான் லாடேன்ந்தலில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், அ.சா.1, சாட்சி இதயதுல்லா, சாலை விபத்தில் இறந்த ராமன் என்பவரை தெரியும் என்றும், லாடனேந்தலில் 02.05.2008ம் தேதி பேருந்து நிறுத்தத்தில் தான், இதயதுல்லா, அ.சா.1 ஆகியோர் நின்று கொண்டிருந்தோம் என்றும், இராமேஸ்வரம் டு மதுரை நோக்கி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ராமன் சென்று கொண்டிருந்தார் என்றும், அவருக்கு பின்னால் 407 வேன் 4786 என்ற பதிவு எண் உள்ள வேன் ஒன்று அதி வேகமாக வந்து டமார் என்று ராமன் சைக்கிளில் மோதியது என்றும், வேன் சிறிது தூரம் போய் நின்றுகொண்டிருந்தது என்றும், வேன் டிரைவர் டிரைவர் ஓடிவிட்டார் என்றும், ராமனை பார்த்தப்போது தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது என்றும், தாங்கள் மூவரும் இன்னொரு வேனில் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்த்துவிட்டு ராமனின் அப்பாவுக்கு தகவல் சொல்லி அவரும் வந்துவிட்டார் என்றும், ராமன் மாலை 4 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், தன்னை திருப்புவனம் போலீஸார் வழக்கை பதிவு செய்ததின் அடிப்படையில் தன்னை விசாரித்தபோது மேற்கண்ட விவரங்களை கூறினேன் என்றும், இந்த விபத்து வேன் டிரைவரின் கவனக்குறைவால்தான் ராமனுக்கு விபத்து உண்டானது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 அம்பலநாதன் தனது சாட்சியத்தில், தான் லாடனேந்தலில் குடியிருந்து கிராமியப்பாடல் பாடும் தொழில் செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 மற்றும் 2 சாட்சிகள் தங்கள் ஊர்க்காரர்கள் என்றும், அவர்களை தெரியும் என்றும், 02.05.2008ம் தேதி தான் தன் வீட்டில் இருந்தபோது தன் மகன் கடைக்கு செல்ல வேண்டி சைக்கிளில் போய்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:38:19 +0530

சாமான்கள் வாங்கி திரும்ப வந்து கொண்டிருந்த போது தனக்கு அ.சா.2 சுப்பையா தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் மகன் வேனில் அடிபட்டு கிடப்பதாக சொன்னார் என்றும், வேன் மதுரை நோக்கி மேற்கு முகமாக வந்து கொண்டிருந்தது என்றும், காயம்பட்ட தன் மகனை மூவரும் மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டனர் என்றும், வேன் நின்றுகொண்டிருந்தது என்றும், போலீஸார் மூலம் வேன் ஓட்டுநரைத் தெரிந்துகொண்டோம் என்றும், மாலை 4 மணிக்கு தன் மகன் ராமன் இறந்துவிட்டார் என்றும், இது சம்மந்தமாக சுப்பையா, நேரு ஆகியோர் திருப்புவனம் காவல் நிலையம் சென்று ஒரு புகார் கொடுத்தனர் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 இதயதுல்லா தனது சாட்சியத்தில், தான் லாடனேந்தலில் குடியிருந்து செங்கல் சூளை வைத்து நடத்தி வருகிறேன் என்றும், விபத்தில் இறந்துபோன ராமன் என்பவரை தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் ஓட்டுநர் ஆவார் என்றும், கடந்த 2008 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், தானும், சுப்பையாவும், நேரு ஆகியோர்களும் லாடனேந்தல் பேருந்து நிறுத்தம் அருகே மதியம் சுமார் 01.00 மணியளவில் பேசிக்கொண்டிருந்தபோது தங்கள் ஊரைச்சேர்ந்த ராமன் என்பவர் சைக்கிளிலில் லாடனேந்தல் பேருந்து நிறுத்ததிலிருந்து மானாமதுரை – மதுரை செல்லும் ரோட்டின் இடது புறமாக மேற்கு நோக்கி ராமன் சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த 407 வேன் சம்பவம் நடந்து நிறைய வருடங்கள் ஆனதால் தனக்கு வாகனத்தின் பதிவு எண் ஞாபகமில்லை என்றும், மேற்படி வேன் ராமன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தபோக்கு இருந்தது என்றும், தாங்கள் ஆம்புலன்ஸ் மூலமாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம் என்றும், மேற்படி 407 வேனை ஓட்டிவந்தவர் குறித்து தற்போது தனக்கு ஞாபகமில்லை என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.5) அ.சா.5 ராமலிங்கம் தனது சாட்சியத்தில், தான் டி. ஆலங்குளத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 18 வருடங்களுக்கு முன்பு காவல் நிலையத்திற்கு தான் ஒரு வேலையாக சென்றபோது போலீசார் அங்கு வைத்து அந்த கையெழுத்தை வாங்கினார்கள் என்றும், விபத்து வழக்கு

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:38:27 +0530

சம்மந்தமாக மேற்படி கையெழுத்தை போட்டேன் என்றும், மேற்படி ஆவணத்தில் மருது என்பவரும் கையெழுத்து போட்டார் என்றும், பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், மேற்படி பார்வை மகஜரில் உள்ள தனது முதல் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.6)அ.சா.6 சிவக்குமார், காவல் கூடுதல் கண்காணிப்பாளர்(ஓய்வு) தனது சாட்சியத்தில், கடந்த 02.05.2008ம் தேதி 21.00 மணிக்கு நாகராஜன் மகன் நேரு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.157/2008 பிரிவு 304(A) இதசவின் கீழ் தலைமைக் காவலர் 1407 திரு. சாக்ரட்டிஸ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 என்றும், அதன் பின்பு இவ்வழக்கினை தான் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 03.05.2008ம் தேதி திருப்புவனம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 07.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ராமலிங்கம் மற்றும் மருதுபாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் நேரு, சுப்பையா, இதயதுல்லா, அம்பலநாதன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனிதனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், அதன் பின்பு அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து காலை 11.00 – 13.00 மணி வரை இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன ராமன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்தேன் என்றும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 என்றும், அதன் பின்பு ராமன் என்பவரின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை தலைமைக்காவலர் 1407 திரு. சாக்ரட்டீஸ் என்பவர் மூலம் கொடுத்து அனுப்பினேன் என்றும், சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரி அய்யனார் என்பவரை திருப்புவனம் காவல் நிலையத்தில் வைத்து 04.05.2008ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், பின்னர்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:38:34 +0530

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 57 B 4786 என்ற பதிவெண் கொண்ட டாடா 407 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி சிவகங்கை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. கல்யாணக்குமார், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன் என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.7 என்றும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்து வாகனத்தின் இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என சான்றுவழங்கியுள்ளார் என்றும், விபத்தில் இறந்துபோன ராமன் பிரேதத்தை பரிசோதனை செய்த மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் மெய்யழகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன் என்றும், பிரேத பரிசோதனை சான்று அ.த.சா.ஆ.8 என்றும், பிரேத பரிசோதனை சான்றிதழில் காயம்பட்டவர் அவருக்கு ஏற்பட்ட THE DECEASED WOULD APPEAR TO HAVE DIED OF CRANIO CEREBRAL INJURIES காரணமாக இறந்துள்ளார் என சான்று வழங்கியுள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் பிரேதத்தை மருத்துவருக்கு அங்க மச்ச அடையாளம் காட்டி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் 1407 திரு. சாக்ரட்டீஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 304 (A) இதசவின் கீழ் 04.06.2008–ம் தேதியன்று கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை முன்பாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கு எதிரிக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச.313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரி அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா, என்று வினவிய போது எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார் .

8) இவ்வழக்கு எதிரி மீது அரசுதரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்னையாகும்.

**தீர்வு–**

9) அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கில் கடந்த 02.05.2008ம் தேதி பகல் 13.00 மணிக்கு லாடனேந்தலில் மதுரை to இராமேஸ்வரம் NH ரோட்டில் , இவ்வழக்கின் இறந்த நபரான ராமன் என்பவர் சைக்கிளில் கிழக்கே இருந்து மேற்கு நோக்கி வந்தவரை

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:38:42 +0530

எதிரியானவர் தான் ஓட்டிவந்த TN-57-B-4786 என்ற 407 வேனை அதிகவேகமாகவும், அஜாக்கரதையாகவும் ஹாரன் அடிக்காமலும் ஓட்டிவந்து மோதி மேற்படி இராமனுக்கு தலையில் பலத்த காயத்தை உண்டாக்கி இறக்கச் செய்தது என்பது எனது புலன் விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் உண்மை என தெளிவாக தெரியவருகிறது. எனவே எதிரியானவர் மீது இதச பிரிவு 304(A) ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதனை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்தபட்டுள்ளனர்.

10) அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் அ.சா1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும் அ.த.சா.ஆ1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அ.சா.1 புகார்தாரர் அ.சா.2 கண்ணுற்ற சாட்சி ஆகியோர் தங்களது சாட்சியத்தில் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியது குறித்து சாட்சியம் அளித்துள்ளதாகவும் விபத்து ஏற்பட்டவுடன் எதிரி சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டதாகவும் இதில் இருந்து எதிரியின் குற்ற மனம் (guilty mind) அரசு தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபனம் செய்துள்ளதாக வாதுரை எடுத்துரைத்தார்.

11) மேலும் அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதுரையில் மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்ப்பான Ravikapoor Vs State of Rajastan என்ற வழக்கில் கீழ்கண்டவாறு சொல்லப்பட்டதாக வாதுரை எடுத்துரைத்தார்.

12) The court has to adopt another parameter, i.e reasonable care in determining the question of negligence or contributory negligence. The doctorine of reasonable care impose an obligation or a duty upon a person ( for example a driver ) to care for the pedestrian on the road and this duty attains a higher degree when the pedestrian happen to be children of tender years. It is axiomatic to say that while driving a vehicle on a public way, there is an implicit duty cast on the drivers to see that their driving does not endanger the life of the right users of the road , may be either vehicular users or pedestrians. They are expected to take sufficient care to avoid danger to others.

13) மாறாக எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:38:49 +0530

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் அ.சா.4 மற்றும் 5 பிறழ் சாட்சியாக மாறியுள்ளதாகவும் அ.சா.1 தனது சாட்சியத்தில் கவனக்குறைவு பற்றி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், புகார் ஆனது காலதாமதமாக கொடுப்பட்டுள்ளதாகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையுல் வாகனத்தின் பின்புற மக்காட்டில் சேதம் இருப்பதாக தெரிவித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியான அசா6ன் சாட்சியம் வாகனங்கள் நேருக்கு நேர் மோதிகொண்டது போல் சாட்சியம் அளித்துள்ளதாகவும், கண்ணுற்ற சாட்சிகள் பேருந்து நிறுத்தத்திற்குள் நின்று இருந்ததால் சம்பவத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்பில்லை என்றும் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் சம்பவ சாட்சியங்களின் சாட்சியமானது எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக அமையவில்லை என்றும் எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதுரை எடுத்துரைத்தார்.

14) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 நேரு தனது சாட்சியத்தில், கடந்த 02.05.2008ம் தேதி மதியம் 1 மணியளவில் தானும், சுப்பையா , இதயதுல்லா ஆகியோர் லாடனேந்தல் பேருந்து நிறுத்தில் நின்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது ராமன் என்பவர் சைக்கிளில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி போய்க்கொண்டு இருந்தார் என்றும், அப்போது கிழக்கு முதல் மேற்கு நோக்கி ஒரு வேன் டி எண். 57 B 4786 என்ற பதிவு எண் உள்ள 406 வேன் அதிவேகமாக வந்து ராமன் மீது வேகமாக மோதி விபத்து உண்டாக்கியது என்றும், விபத்து உண்டாக்கி விட்டு அந்த வேனின் ஓட்டுநர் வேனை நிறுத்தி விட்டு ஓடிவிட்டார் என்றும், அதன்பின் காவல் நிலையம் சென்று விசாரித்து அவர் மதுரை என்று தெரியும் என்றும், ராமனுக்கு தலையில் அடிபட்டு இருந்தது அவரை டாடா ஏ.சி.யில் (காரில்) வைத்து தானும், சுப்பையா, இதயதுல்லா ஆகியோர் மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், அவர் அங்கு இறந்துவிட்டார் என்றும், மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும், ராமனின் பெற்றோர்களுக்கு தகவல் கொடுத்து அவர்களும் வந்துவிட்டார்கள் என்றும், இறந்த ராமன் லாடனேந்தல் ஆவார் என்றும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தனர் என்றும், புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், இந்த விபத்து உண்டாக்கிய வேனின் ஓட்டுநர் அதிவேகமாக வந்ததால் தான் இந்த விபத்து உண்டானது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் எதிரி வாகனத்தை அதிவேகமாக இயக்கியது குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பதை அறிய

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:38:55 +0530

முடிகிறது. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோதிலும் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக யாதொரு சாட்சிமும் அ.சா.1 இடமிருந்து பெறப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

15)இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 சுப்பையா தனது சாட்சியத்தில், லாடனேந்தலில் 02.05.2008ம் தேதி பேருந்து நிறுத்ததில் தான், இதயதுல்லா, அ.சா.1 ஆகியோர் நின்று கொண்டிருந்தோம் என்றும், இராமேஸ்வரம் to மதுரை நோக்கி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ராமன் சென்று கொண்டிருந்தார் என்றும், அவருக்கு பின்னால் 407 வேன் 4786 என்ற பதிவு எண் உள்ள வேன் ஒன்று அதிவேகமாக வந்து டமார் என்று ராமன் சைக்கிளில் மோதியது என்றும், வேன் சிறிது தூரம் போய் நின்றுகொண்டிருந்தது என்றும், வேன் டிரைவர் ஓடிவிட்டார் என்றும், ராமனை பார்த்தப்போது தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது என்றும், தாங்கள் மூவரும் இன்னொரு வேனில் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்த்துவிட்டு ராமனின் அப்பாவுக்கு தகவல் சொல்லி அவரும் வந்துவிட்டார் என்றும், ராமன் மாலை 4 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், தன்னை திருப்புவனம் போலீஸார் வழக்கை பதிவு செய்ததன் அடிப்படையில் தன்னை விசாரித்தபோது மேற்கண்ட விவரங்களை கூறினேன் என்றும், இந்த விபத்து வேன் டிரைவரின் கவனக்குறைவால்தான் ராமனுக்கு விபத்து உண்டானது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.2ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அ.சா.2 விபத்தை கண்ணுற்று பார்த்தது பற்றியும் எதிரியின் அதிவேகத்தாலும் கவனக்குறைவாலும் தான் இவ்விபத்து ஏற்பட்டது என சாட்சியம் அளித்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

16)இவ்வழக்கில் கேள்விபட்ட சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.3 அம்பலநாதன் தனது சாட்சியத்தில், 02.05.2008ம் தேதி தான் தன் வீட்டில் இருந்தபோது தன் மகன் கடைக்கு செல்ல வேண்டி சைக்கிளில் போய் சாமான்கள் வாங்கி திரும்ப வந்து கொண்டிருந்த போது தனக்கு அ.சா.2 சுப்பையா தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன் மகன் வேனில் அடிபட்டு கிடப்பதாக சொன்னார் என்றும், வேன் மதுரை நோக்கி மேற்கு முகமாக வந்து கொண்டிருந்தது என்றும், காயம்பட்ட தன் மகனை மூவரும் மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டனர் என்றும், வேன் நின்றுகொண்டிருந்தது என்றும், போலீஸார் மூலம் வேன் ஓட்டுநரைத் தெரிந்துகொண்டோம் என்றும், மாலை 4 மணிக்கு தன் மகன் ராமன்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:39:00 +0530

இறந்துவிட்டார் என்றும், இது சம்மந்தமாக சுப்பையா, நேரு ஆகியோர் திருப்புவனம் காவல் நிலையம் சென்று ஒரு புகார் கொடுத்தனர் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

17) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.4 இதயதுல்லா தனது சாட்சியத்தில், கடந்த 2008 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும், தானும், சுப்பையாவும், நேரு ஆகியோர்களும் லாடனேந்தல் பேருந்து நிறுத்தம் அருகே மதியம் சுமார் 01.00 மணியளவில் பேசிக்கொண்டிருந்தபோது தங்கள் ஊரைச்சேர்ந்த ராமன் என்பவர் சைக்கிளிலில் லாடனேந்தல் பேருந்து நிறுத்ததிலிருந்து மானாமதுரை – மதுரை செல்லும் ரோட்டின் இடது புறமாக மேற்கு நோக்கி ராமன் சென்று கொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த 407 வேன் சம்பவம் நடந்து நிறைய வருடங்கள் ஆனதால் தனக்கு வாகனத்தின் பதிவு எண் ஞாபகமில்லை என்றும், மேற்படி வேன் ராமன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தபோக்கு இருந்தது என்றும், தாங்கள் ஆம்புலன்ஸ் மூலமாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம் என்றும், மேற்படி 407 வேனை ஓட்டிவந்தவர் குறித்து தற்போது தனக்கு ஞாபகமில்லை என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.4ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18)இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.5 ராமலிங்கம் தனது சாட்சியத்தில், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 18 வருடங்களுக்கு முன்பு காவல் நிலையத்திற்கு தான் ஒரு வேலையாக சென்றபோது போலீசார் அங்கு வைத்து அந்த கையெழுத்தை வாங்கினார்கள் என்றும், விபத்து வழக்கு சம்மந்தமாக மேற்படி கையெழுத்தை போட்டேன் என்றும், மேற்படி ஆவணத்தில் மருது என்பவரும் கையெழுத்து போட்டார் என்றும், பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:39:06 +0530

குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.5ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 சிவக்குமார் காவல் கூடுதல் கண்காணிப்பாளர்(ஓய்வு) தனது சாட்சியத்தில், கடந்த 02.05.2008ம் தேதி 21.00 மணிக்கு நாகராஜன் மகன் நேரு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.157/2008 பிரிவு 304(A) இதசவின் கீழ் தலைமைக் காவலர் 1407 திரு. சாக்ரட்டிஸ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், அதன் பின்பு இவ்வழக்கினை தான் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 03.05.2008ம் தேதி திருப்புவனம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 07.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ராமலிங்கம் மற்றும் மருதுபாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் நேரு, சுப்பையா, இதயதுல்லா, அம்பலநாதன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனிதனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், அதன் பின்பு அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து காலை 11.00 – 13.00 மணி வரை இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன ராமன் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கையை தயார் செய்தேன் என்றும், அதன் பின்பு ராமன் என்பவரின் இறப்பிற்கான உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதத்தை தலைமைக்காவலர் 1407 திரு.சாக்ரட்டீஸ் என்பவர் மூலம் கொடுத்து அனுப்பினேன் என்றும், சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரி அய்யனார் என்பவரை திருப்புவனம் காவல் நிலையத்தில் வைத்து 04.05.2008ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 57 B 4786 என்ற பதிவெண்கொண்ட டாடா 407 வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி சிவகங்கை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. கல்யாணக்குமார், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன் என்றும், மோட்டார்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:39:11 +0530

வாகன ஆய்வறிக்கையில் விபத்து வாகனத்தின் இயந்திரக்கோளாறினால் ஏற்படவில்லை என சான்றுவழங்கியுள்ளார் என்றும், விபத்தில் இறந்துபோன ராமன் பிரேதத்தை பரிசோதனை செய்த மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் மெய்யழகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன் என்றும், பிரேத பரிசோதனை சான்றிதழில் காயம்பட்டவர் அவருக்கு ஏற்பட்ட THE DECEASED WOULD APPEAR TO HAVE DIED OF CRANIO CEREBRAL INJURIES காரணமாக இறந்துள்ளார் என சான்று வழங்கியுள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் பிரேதத்தை மருத்துவருக்கு அங்க மச்ச அடையாளம் காட்டி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் 1407 திரு. சாக்ரட்டீஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 304 (A) இதசவின் கீழ் 04.06.2008–ம் தேதியன்று கணம் நீதித்துறை நடுவர், மானாமதுரை முன்பாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20)இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் புகார்தாரரான அசா1 எதிரி வாகனத்தை அதிவேகமாக இயக்கி விபத்து ஏற்படுத்தியது குறித்து சாட்சியம்அளித்துள்ளார் அதேபோல் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியான அசா2 எதிரியின் அதிவேகத்தாலும் கவனக்குறைவாலும் தான் இவ்விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சிகளை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் முதல் விசாரணையில் மேற்படி சாட்சிகள் அளித்த சாட்சியத்தை மறுத்தளிக்கும் வகையில் யாதொரு பதிலும் எதிரிக்கு சாதகமாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பெறப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. அ.சா.2ன் சாட்சியமானது எதிரியின் அதிவேகம் குறித்தும் கவனக்குறைவு குறித்தும் தெள்ளதெளிவாக சாட்சியம் அளித்துள்ளதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 134 ல் சொல்லப்பட்டுள்ள சாராம்சங்களின் படி அ.சா.2ன் சாட்சியம் மட்டுமே எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக அமைந்துள்ளது என்றும் அ.சா.2 ன் சாட்சியம் முழுவதும் நம்பக்கூடிய வகையில் அமைந்துள்ளது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அ.சா.2ன் சாட்சியம் மட்டுமே எதிரியை இக்குற்றசம்பவத்தில் தொடர்புபடுத்த போதுமானதாக அமைந்தது என்றும் திசையை குறித்து அசா 6 புலன் விசாரணை அதிகாரி அரசு தரப்பு வழக்கில் இருந்து மாறுபட்டு சாட்சியம் அளித்திருந்தாலும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2ன் சாட்சியம் மட்டுமே எதிரியை குற்றவாளிஎன தீர்மானிக்க போதுமானதாக அமைந்துள்ளது என

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:39:17 +0530

இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21) மேலே குறிப்பிட்ட பரிசீலனையின் அடிப்படையில் எதிரி மீது சட்டப்பிரிவு 304(ஏ) இதச வின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரயை மேற்படி சட்டப்பிரிவு 304(ஏ) இதச வின் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

22) **மேலும், எதிரிக்கு எதிராக** 304(ஏ) **இதச வின் கீழ் வழங்கயிருக்கும் தண்டனை குறித்து குவிமுச பிரிவு 248(2)ன் வினவிய போது எதிரி தனக்கு வயதாகிவிட்டது என்றும் இவ்விபத்து நடந்து கடந்த 18 ஆண்டுகளாக இவ்வழக்கு நடவடிக்கையில் தவறாமல் ஆஜராகியுள்ளதாகவும், வயதோகிதத்தை கருத்தில் கொண்டு குறைந்த தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.**

23) இவ்வழக்கில் எதிரிக்கு வழங்கயிருக்கும் தண்டனைப்பற்றி கேட்டபோது அவர் கூறிய பதிலையும் வழக்கின் ஒட்டுமொத்த பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் வழக்கின் தன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிரிக்கு நன்நடத்தை சட்டத்தின் கீழ் எவ்வித பலனும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

அ) முடிவாக, எதிரி பிரிவு 304(ஏ) இதசவின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து 304(ஏ) இதசவின் கீழான குற்றத்திற்கு தண்டயையாக ஓர் ஆண்டு மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், ரூ.5,000/– அபராதம் செலுத்தவேண்டும் என்றும், அபராதத்தொகையை செலுத்தத் தவறினால் மேலும் 2 வார காலம் மெய்க்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும், குவிமுச பிரிவு 248(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

ஆ) இவ்வழக்கில் எதிரி ஏற்கனவே சிறையில் இல்லாததால் குவிமுச பிரிவு 428ன் கீழ் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை .

இ) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. இவ்வழக்கில் எதிரி எழுதிக்கொடுத்த பிணமுறி ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:39:22 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 –ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:39:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

அரசு தரப்பு சாட்சிகள்:–

| | |
|---|---|
| அ.சா.1 | நேரு , நிகர்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | சுப்பையா, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | அம்பலநாதன், கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.4 | இதயதுல்லா, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | ராமலிங்கம், பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | சிவக்குமார், காவல் ஆய்வாளர், புலன் விசாரணை அதிகாரி |

அரசுதரப்பு சான்றாவணங்கள்:–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1/அ.சா.1 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2/அ.சா.5 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5 ன் முதல் கையெழுத்து மட்டும் |
| அ.த.சா.ஆ.3/அ.சா.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4/அ.சா.6 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.5/அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.6/அ.சா.6 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.த.சா.ஆ.7/அ.சா.6 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.8/அ.சா.6 | பிரேத பரிசோதனை சான்று |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள் இல்லை**

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்– இல்லை

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.11 13:39:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

குறிப்பு–

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்திவைக்கப்படவில்லை.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை**
**நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.141/2019**
**தீர்ப்புரை**
**வரைவு/சீரான**
**நாள்: 11.08.2026**